بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 32

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

26 ஸுல்கஃதா 1439 ஹிஜ்ரி கமரி 9 ஸஹுர் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

9 ஆகஸ்ட் 2018

## அல்லாஹ்வின் கட்டளை

مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ كَمَثَلِ حَبَّةٍ اَنْبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِيْ كُلِّ سُنْۢبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ؕ وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ ○

தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்றவருக்கு, ஒரு தானியம் உதாரணமாகும். அத்தானியம் ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் இருக்கும். தான் நாடியவருக்கு அல்லாஹ் அதிக(மதிக)மாகக் கொடுக்கிறான். அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனுமாவான். (2:262)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**மிக கவனமாக செயல்படுங்கள். எவ்வேலையாயினும் நன்றாக ஆராய்ந்தபின் செய்யத் துணியுங்கள். அத்துடன் இறைவனது உதவியையும் தேடிக் கொண்டிருங்கள். ஏனென்றால் நீங்கள் குருடர்களாயிருப்பதால் நீதிமான்களை அநீதிக்காரர்களாகவும், உண்மையாளர்களை பொய்யர்களாகவும் எண்ணி விடலாகாது. இதனால் நீங்கள் உங்கள் இறைவனை வெறுப்படையச் செய்யாதீர்கள். மேலும் உங்களது நல்ல காரியங்கள் செயல்கள் வீணாகிப் போய் விடலாம்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் [நூஹ் நபியின் கப்பல்] என்ற நூலிலிருந்து...**

திருக்குர்ஆன் உங்களுக்காக ஏராளமான புனிதக் கட்டளைகளை வகுத்துள்ளது. அவற்றுள் ஒன்று, இணை வைப்பத்திலிருந்தும் நீங்கள் உங்களை முற்றிலும் விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும். ஏனெனில் இணை வைப்பவன் இரட்சிப்பின் ஊற்றினை அடையும் நற்பேற்றினை இழந்தவனாக இருக்கிறான். நீங்கள் பொய் பேசாதீர்கள். ஏனெனில் பொய்யும் இணை வைப்பதின் ஒரு பகுதியாகும்.

திருக்குர்ஆன் உங்களுக்கு பைபிளின் புதிய ஏற்பாட்டைப் போல் அந்நிய பெண்களை நீங்கள் தீய பார்வையுடனோ, காம இச்சையுடனோ பார்க்க வேண்டாம். இது அல்லாமல் அவர்களை பார்ப்பது கூடுமானது என்று மட்டும் கூறவில்லை. மாறாக தீய பார்வையுடனோ நல்ல பார்வையுடனோ நீங்கள் அவர்களை அறவே பார்க்கக் கூடாதென்றே அது கூறுகின்றது.

காரணம் இவையெல்லாம் உங்களுக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இடங்களாகும். மேலும் அந்நிய பெண்களுக்கு எதிரில் நீர் இருக்கும் போது உமது கண்கள் உறங்குவது போன்ற நிலையில் இருப்பது அவசியமாகும். அவளது உருவத்தைப் பற்றிய எவ்வித அறிவும் உமக்கு இருத்தலாகாது. கண் நோயின் ஆரம்பத்தில் கண்ணீர் வடியும் போது மங்கலான பார்வையின் நிலையைப் போல் இருக்க வேண்டும்.

திருக்குர்ஆன் உங்களுக்கு புதிய ஏற்பாட்டைப் போல் போதை உண்டாகும் வரை மது அருந்த வேண்டாம் என்று கூறவில்லை. மாறாக, நீ மதுவை அருந்தவே வேண்டாம். இல்லாவிடில் உங்களுக்கு இறைவனை அடையும் வழி கிடைக்காது. மேலும் உங்களோடு உரையாட மாட்டான். மேலும் அசுத்தங்களிலிருந்தும் அவன் உங்களை தூய்மைப்படுத்த மாட்டான் என்றே திருக்குர்ஆன் கூறுகிறது. மேலும் இது ஷெய்த்தானால் உண்டாக்கப்பட்ட தொன்றாகும்.

ஆகவே இதிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று அது கூறுகிறது. திருக்குர்ஆன் உங்களுக்கு புதிய ஏற்பாட்டைப் போல் உனது சகோதரர் மீது நீர் காரணமில்லாமல் கோபம் கொள்ள வேண்டாம் என்று மட்டும் கூறவில்லை. மாறாக உங்கள் கோபத்தை மட்டும் அடக்கினால் போதாது. அத்துடன் تَوَاصَوْا بِالْمَرْحَمَةِ (ஒருவருக்கொருவர் கருணை புரியுமாறு அறிவுரை கூற வேண்டும் (90:18) என்பதன் படியும் செயல்படுங்கள் எனவும் இதனை கடைபிடிக்குமாறு மற்றவர்களுக்கும் நீங்கள் அறிவுரை கூறிக் கொண்டே இருங்கள் எனவும் மேலும் நீங்கள் மட்டும் கருணை காட்டினால் போதாது; உங்களது எல்லா சகோதரர்களுக்கும் கருணை காட்டுமாறு போதனை செய்து கொண்டிருங்கள் எனவும் அது கூறுகிறது.

திருக்குர்ஆன் உங்களுக்கு புதிய ஏற்பாட்டைப் போல் விபச்சாரத்தைத் தவிர உனது மனைவியின் பரிசுத்த மற்ற ஒவ்வொரு செயல் மீதும் நீங்கள் பொறுமையைக் கடைபிடியுங்கள். நீங்கள் அவளை விவகாரத்து செய்ய வேண்டாம் என்று கூறவில்லை. மாறாக, الطَّيِّبٰتُ لِلطَّيِّبِيْنَ அதாவது நல்ல பெண்கள் நல்ல ஆண்களுக்குத் தகுந்தவர்கள் ஆவர் (24:27) என்று கூறுகின்றது.

தூய்மை இல்லாதது தூய்மையுடன் சேர்ந்து இணைந்திருக்க முடியாது என்பது திருக்குர்ஆனின் கருத்தாகும். எனவே உங்களது மனைவி விபச்சாரம் செய்யாவிட்டாலும் அவள் காம இச்சையுடன் மற்றவர்களை பார்க்கிறாள்; அவர்களை கட்டியணைக்கிறாள்; விபச்சாரத்திற்கான முன்னோடியான செயல்கள் அவளிடமிருந்து வெளிப்படுகின்றன. அவை முழுமையை அடையவில்லையென்றாலும் அவள் தனது நிர்வாணத்தை மற்றவர்களுக்குக் காட்டுகின்றாள். அவள் இணை வைப்பவளாகவும் குழப்பம் விளைவிப்பவளாகவும் இருக்கிறாள். நீங்கள் எந்தப் பரிசுத்த இறைவன் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களோ அவனோடு அவள் வெறுப்புணர்ச்சி கொண்டவளாகவும் இருக்கின்றாள். அவள் இத்தீய செயல்களை விட்டும்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் சுபைய் பின் கைஸ் (ரலி), ஹஸ்ரத் உனைஸ் பின் கதாதா (ரலி), ஹஸ்ரத் முலைல் பின் வபரா (ரலி), ஹஸ்ரத் நவ்ஃபல் பின் அப்தில்லாஹ் (ரலி), ஹஸ்ரத் வதீஆ பின் அம்ர் (ரலி), ஹஸ்ரத் யஸீத் பின் முன்ஸிர் (ரலி), ஹஸ்ரத் ஹார்ஜா பின் ஹுமைய்யிர் அஷ்ஜிஈ சுகாரா பின் அம்ர் (ரலி), ஹஸ்ரத் அப்பாத் பின் கைஸ் (ரலி), ஹஸ்ரத் அபூ அஸ்ஸியாஹ் பின் சாபித் பின் நுஃமான் (ரலி), ஹஸ்ரத் அனஸா (ரலி), ஹஸ்ரத் அபூ கப்ஷா சுலைம் பின் கப்ஷா (ரலி), ஹஸ்ரத் முர்ஸது பின் அபீ முர்ஸத் பின் கன்னாஸ்(ரலி), ஹஸ்ரத் சலீத் பின் கைஸ் (ரலி), ஹஸ்ரத் முஜஸ்ஸர் பின் ஸியாத் (ரலி), ஹஸ்ரத் குபாப் பின் முன்ஸர் (ரலி), ஹஸ்ரத் ரிஃபாஆ பின் ராஃபிஃ (ரலி) ஆகிய சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

---

**சஹாபாக்களின் விவகாரங்களில் ஒருவர் மற்றவருக்கிடையே காணப்படுகின்ற கருத்து வேறுபாடுகளை நமது உள்ளத்தில் இடமளிப்பது நமது பணியல்ல. அல்லாஹ்வின் கருணையும், மன்னிக்கும் பண்பும் மிகவும் பரந்து விரிந்ததாகும். எனவே அதைப் பற்றி சிந்திக்கவோ அல்லது அதைப்பற்றி எதையும் கூறுவதற்கோ பகரமாக நமது விவகாரங்களை நாம் சரி செய்ய வேண்டும். நம்மை நாம் சீர்திருத்த வேண்டும். நாம் எப்போதும் ஒன்றுபட்டு இருக்கவும், ஒற்றுமையில் நிலைத்திருக்கவும், நன்மைகளில் முன்னேறிச் செல்வதற்கும் அல்லாஹ் நமக்கு வாய்ப்பு அளிப்பானாக. ஆமீன்**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 6 ஜுலை 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **6 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்றைய நாட்களில் நான் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களைப் பற்றி எடுத்துக் கூறி வருகின்றேன். வரலாற்றிலும், அறிவிப்புகளிலும் சில சஹாபாக்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சம்பவங்கள் மிகவும் விரிவாக கிடைக்கின்றன. ஆனால் பெரும்பான்மையானவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய சம்பவங்கள் மிகவும் சுருக்கமாகவே கிடைக்கின்றது. ஆனால் பத்ர் போரில் கலந்து கொண்டதன் காரணமாக அவர்களின் அந்தஸ்து தமக்குரிய இடத்திலேயே நிலைபெற்றுள்ளது.

எனவே அவர்களைப் பற்றிய குறிப்பு சில பக்கங்களைக் கொண்டதாக இருந்தாலும் கூட அது எடுத்துக் கூறப்பட வேண்டும். இன்று எந்த சஹாபாக்களைப் பற்றி கூறப்பட இருக்கின்றதோ அவர்களைப் பற்றி மிகவும் சுருக்கமான குறிப்புகளே இருக்கின்றன.

அவர்களில் முதலாவதாக, ஹஸ்ரத் சுபைய் பின் கைஸ் பின் அய்ஷா அவர்கள் ஆவார்கள். சிலர் அவர்களின் தந்தை வழி பாட்டனாரின் பெயரை அபஸா என்றும், சிலர் ஆயிஷா என்றும் எழுதியுள்ளனர். எவ்வாறிருப்பினும் அவர்கள் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். உஹது மற்றும் பத்ர் போரில் கலந்து கொண்டுள்ளார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 407, சுபைஹ் பின் கைஸ் (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 403 சுஹைப் பின் கைஸ் (ரலி), இபாதா பின் கைஸ் (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அவர்களது தாயின் பெயர் கதீஜா பின்த் அம்ர் பின் ஸைது ஆகும். அவர்களுக்கு ஒரு மகன் இருந்தார். அவரது பெயர் அப்துல்லாஹ் ஆகும். பனூ ஜதாரா என்ற கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அவர் இளமைப் பருவத்திலேயே வஃபாத்தாகி விட்டார்கள். இதைத் தவிர வேறு எந்த குழந்தையும் அவர்களுக்கு கிடையாது. ஹஸ்ரத் அபாதா பின் கைஸ் அவர்களது சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் சுபைய் அவர்களுக்கு ஸைது பின் கைஸ் என்ற சகோதரரும் இருந்தார்.

இரண்டாவது ஹஸ்ரத் உனைஸ் பின் கதாதா என்ற சஹாபி ஆவார். உஹது போரின் போது அன்னாரது வஃபாத் நிகழ்ந்தது. சிலர் அன்னாரது பெயரை அனஸ் என்று கூறுகின்றனர். ஆனால் அவர்களது சரியான பெயர் உனைஸ் ஆகும். முஹம்மது பின் இஸ்ஹாக் மற்றும் முஹம்மது பின் அம்ர் ஆகிய இருவரும் உனைஸ் என்றே எழுதியுள்ளனர். பத்ர் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து கலந்து கொண்டார்கள். மேலும் உஹது போரில் அன்னார் ஷஹீதானார்கள். அன்னாருக்கும் எந்த குழந்தையும் கிடையாது. ஓர் அறிவிப்பில் வருகின்றது. உஹது நாளில் ஷஹீது ஆகும் போது ஹஸ்ரத் உனைஸ் பின் கிதாதா அவர்களுக்கு ஹன்ஸா பின் கிதான் என்ற மனைவியும் இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 305–306, உனைஸ் பின் கதாதா (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 353–354 வமின் நபி உபைதா பின் ஸைது (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஒரு சஹாபியின் பெயர் ஹஸ்ரத் முலைல் பின் வபரா ஆகும். இவர்களது பெயரைப் பற்றியும் அறிவிப்புகளில் பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன. இப்னு இஸ்ஹாக் மற்றும் அபூ நயீம் ஆகியோர் அன்னாரது பெயரை முலைல் பின் வபரா பின் அப்தில் கரீம் பின் காலித் பின் அஜலான் என்று கூறியுள்ளார்கள். ஆனால் அபூ உமர் மற்றும் கல்பி ஆகிய இருவரும் அன்னாரது பெயரை முலைல் பின் வபரா பின் காலித் பின் அஜலான் என்று கூறியுள்ளார்கள். இதில் அப்துல் கரீம் நடுவில் இருந்து வெளியேறி விட்டது. அன்னார் பனூ ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ அஹ்லானோடு தொடர்புடையவர்கள் ஆவார்கள். பத்ர், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 251, முலைல் பின் வபரா (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அன்னாருக்கு ஸைது மற்றும் ஹபீபா என்ற சந்ததிகள் இருந்தனர். அவர்களது தாயாரின் பெயர் உம்மே ஸைது பின்த் நஸ்லா பின் மாலிக் ஆகும். ஹஸ்ரத் முலைல் அவர்களது சந்திகளும் அன்னாருக்குப் பிறகு தொடரவில்லை.

(அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 416 முலைல் பின் வபரா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் இப்னு காலித் பின் அஜ்லான் என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். ஓர் அறிவிப்பில் அன்னார் பத்ர் போர் மற்றும் ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு இணைந்து கலந்து கொண்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

(அல் அக்மால் ஃபீ ரஃப அல் அர்தியாப்.... தொகுதி 7 பக்கம் 222)

பிறகு இன்னொரு சஹாபியின் பெயர் ஹஸ்ரத் நவ்ஃபல் பின் அப்துல்லாஹ் பின் நஸ்லா ஆகும். அன்னாரது மரணம் உஹது போரில் நிகழ்ந்தது. சிலர் அன்னாரது பெயரை நவ்ஃபல் பின் ஸஃலபா பின் அப்தில்லாஹ் பின் நஸ்லா பின் மாலிக் பின் அஜ்லான் என்று கூறியுள்ளார்கள். அன்னார் பத்ர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள். மேலும் உஹது போரில் ஷஹீதானார்கள். அன்னாரது சந்ததியும் அன்னாருக்குப் பிறகு தொடரவில்லை.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 346,347, நவ்ஃபல் பின் ஸஃலபா (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 415 நவ்ஃபல் பின் ஸஃலபா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு இன்னொரு சஹாபியின் பெயர் வதீஆ பின் அம்ர் ஆகும். இப்னு கலபி அவர்கள் அன்னாரது பெயரை வதீஆ பின் அம்ரு பின் யஸார் பின் அவ்ஃப் என்று குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் அபூ மஹ்ஷர் அவர்கள் அன்னாரது பெயரை ரிஃபாஅ பின் அம்ர் பின் ஜராது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் பனூ நஜ்ஜார் கோத்திரத்தின் நண்பரான பனூ ஜுஹைனாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் பதர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொண்டுள்ளார்கள். ஹஸ்ரத் ரபீஆ பின் அமர் அன்னாரது சகோதரர் ஆவார்கள்.

(அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 377 வதீஆ பின் அம்ரு (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபாக தொகுதி 2 பக்கம் 392, ரபீஆ பின் அம்ரு (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு இன்னொரு சஹாபியின் பெயர் யஸீத் பின் முன்ஸிர் பின் சரஹ் பின் ஹுனாஸ் ஆகும். அன்னார் பனூ ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். பைஅத்தே உக்பாவிலும் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் யஸீத் பின் முன்ஸிர் மற்றும் ஆமிர் பின் ரபீஆ ஆகிய இருவருக்குமிடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள். அன்னார் பத்ர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள். அன்னார் மரணமடைந்த சமயத்தில் அன்னாருக்கு எந்த குழந்தையும் இருக்கவில்லை. அன்னாரது சகோதரரான மஃகில் பின் முன்ஸிர் அவர்களும் பைஅத்தே உக்பா மற்றும் பத்ர், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள்.

(அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 432 யஸீது பின் அல் முன்ஸிர் (ரலி), மஃகல் பின் யஸார் (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 473, யஸீது பின் அப்துல் முன்ஸிர் (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு இன்னொரு சஹாபி ஹார்ஜா பின் ஹுமய்யிர் அஷ்ஜிஈ அவர்கள் ஆவார்கள். வரலாற்றில் அன்னாரது பெயரிலும் பல கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இப்னு இஸ்ஹாக் அவர்கள் அன்னாரது பெயரை ஹார்ஜா பின் ஹுமைய்யிர் என்று கூறியுள்ளார்கள். மூஸா பின் அக்பா அவர்கள் அன்னாரது பெயரை ஹார்ஸா பின் ஹுமைய்யிர் என்று கூறியுள்ளார்கள். வாக்தி அவர்கள் அன்னாரது பெயரை ஹம்ஸா பின் ஹுமைய்யிர் என்று கூறியுள்ளார்கள். அன்னாரது தந்தை பெயர் தொடர்பாகவும் கருத்து வேறுபாடு இருக்கின்றது. சிலர் ஹுமைய்யிர் என்றும், சிலர் ஜுமைரா மற்றும் ஜுமைர் என்று எழுதியுள்ளார்கள்.

எவ்வாறிருப்பினும் அனைவரும் அன்னார் பனூ ஹஸ்ரஜ் கோத்திரத்தின் நண்பரான பனூ அஷ்ஜஉவை சார்ந்தவர்கள் ஆவார்கள் என்பதில் அனைவரும் ஒருமித்த கருத்தை கொண்டிருக்கின்றார்கள். அன்னாரது சகோதரின் பெயர் அப்துல்லாஹ் பின் ஹுமைய்யிர் ஆகும். உஹது போரில் அன்னாரோடு கலந்து கொண்டார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபாக தொகுதி 1 பக்கம் 704, ஹார்ஸா பின் ஹுமைய்யிர் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 649, ஹார்ஸா பின் ஹுமைய்யிர் (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு சுராக்கா பின் அம்ர் என்ற ஓர் சஹாபியைப் பற்றி குறிப்பு உள்ளது. அன்னார் அன்ஸாரி சஹாபி ஆவார்கள். அன்னாரது முழு பெயர் சுராக்கா பின் அம்ர் பின் அதிய்யா பின் ஹன்ஸா அன்ஸாரி ஆகும். அன்னாரது மரணம் ஜமாதில் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 8 வது ஆண்டில் மூத்தா போரில் நிகழ்ந்தது. அன்னாரது தாயின் பெயர் உதைலா பின்த் கைஸ் ஆகும். ஹஸ்ரத் சுராக்கா அவர்கள் அன்ஸாரின் கண்ணியமிக்க கோத்திரமான பனூ நஜ்ஜாரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. சிலர் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதற்கு சற்று முன்பே இஸ்லாத்தை தழுவியதாகவும், சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து சிறிது காலத்திற்குப் பிறகே இஸ்லாத்தை தழுவியதாகவும் குறிப்பிடுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிஹ்ஜஃ மவ்லா உமர் மற்றும் சுராக்கா பின் அம்ர் ஆகிய இருவருக்கிடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள்.

அன்னார் பத்ர் போரிலும், உஹது போரிலும், அகழ் போரிலும், கைபர் போரிலும் கலந்து கொண்டார்கள். மேலும் அன்னார் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நெருக்கத்தை பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் சுராக்கா பின் அமர் அவர்கள் பைஅத்தே ரிஜ்வானில் கலந்து கொண்ட நற்பேறு பெற்ற நபர்களில் ஒருவர் ஆவார்கள். அவர்களது சந்ததியும் தொடரவில்லை. அன்னாரது மரணம் ஹிஜ்ரி 8 வது ஆண்டில் ஜமாதியுல் அவ்வல் மாதத்தில் மூத்தா போரில் நிகழ்ந்தது.

(அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 580, சுராக்கா பின் அம்ரு (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபாக தொகுதி 3 பக்கம் 34, சுராக்கா பின் அம்ரு (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 393 சுராக்கா பின் அம்ர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அயூனுல் அஸர் தொகுதி 1 பக்கம் 233, 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கலமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்பாத் பின் கைஸ் ஒரு சஹாபி ஆவார்கள். அன்னாரது மரணமும் ஹிஜ்ரி 8 வது ஆண்டில் மூத்தா போரில் நிகழ்ந்தது. அன்னாருடைய பெயரிலும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அன்னாரது பெயர் உபாதா பின் கைஸ் பின் அய்ஷா என்றும் வந்துள்ளது. அவ்வாறே அன்னாரது தந்தை வழி பாட்டனாரின் பெயர் அபஸா என்றும் கூறப்படுகின்றது. ஹஸ்ரத் அப்பாத் ஹஸ்ரத் அபூ தர்தா அவர்களின் சிறிய தந்தை ஆவார்கள்.

ஹஸ்ரத் அப்பாத் அவர்கள் பத்ர் போர், உஹது போர், அகழ் போர் மற்றும் கைபர் போரிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹுதைபிய்யா

உடன்படிக்கையிலும் அன்னார் கலந்து கொண்டார்கள். மேலும் மூத்தா போரில் அன்னாரது ஷஹாதத் நிகழ்ந்தது.

(அத்திப்காத்தில் குப்ரா தொகுதி 3 பக்கம் 403 இபாதா பின் கைஸ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 3 பக்கம் 154,இபாதா பின் கைஸ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ ஸய்யாஹ் பின் சாபித் பின் நுஃமான் அவர்கள் ஒரு சஹாபி ஆவார்கள். அவர்களது மரணம் ஹிஜ்ரி ஏழாவது ஆண்டில் நிகழ்ந்தது. ஒரு அறிவிப்பில் அன்னாரது பெயர் உமைர் பின் சாபித் பின் நுஃமான் பின் உமைய்யா பின் உம்ரா உகைஸ் என்று வந்துள்ளது. இன்னோர் அறிவிப்பில் நுஃமான் பின் சாபித் பின் உமைரா பின் கைஸர் என்று வந்துள்ளது. அன்னார் அபூ ஸிய்யாஹ் என்ற தனது சுட்டுப்பெயரால் புகழ்பெற்று விளங்கினார்கள்.

பத்ர், உஹது மற்றும் அகழ் போரிலும், ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் கலந்து கொண்டுள்ளார்கள். ஹிஜ்ரி ஏழாம் ஆண்டில் நடைபெற்ற கைபர் போரில் ஷஹீதானார்கள். ஒரு யூதன் அன்னாரது தலையில் தாக்கினான்; அன்னாரது தலை உடலை விட்டு பிரிந்தது. இதன் விளைவாக அன்னாரது ஷஹாதத் நிகழ்ந்தது என்று கூறப்படுகின்றது.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 175, அபூ அஸைய்யா பின் சாபித் (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்தில் குப்ரா தொகுதி 3 பக்கம் 364,365 அபூ அஸைய்யா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு அனஸா என்ற ஒரு நபித்தோழர் இருக்கின்றார்கள். அன்னாரது மரணமும் பத்ர் போரில் நிகழ்ந்தது. ஆனால் இதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. சிலர் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்திலும் அன்னார் உயிரோடு இருந்ததாக கூறுகின்றார்கள். எவ்வாறிருப்பினும் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அபிசீனிய அடிமையாவார். சிலர் அன்னாரது பெயரை அனஸா என்றும் சிலர் அபூ அனஸா என்றும் குறிப்பிடுகின்றனர்.

அபூ மஸ்ரூஹ் என்பது அன்னாரது சுட்டுப் பெயராகும் என்று சிலர் கூறுகின்றனர். ஹஸ்ரத் அனஸா அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் ஹிஜ்ரத் காலகட்டத்தில் மதீனாவிற்கு சென்றார்கள். மேலும் ஸாது பின் கைஸமா அவர்களின் விருந்தினரானார்கள். எப்போது வரை உயிரோடு இருந்தார்களோ அப்போது வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தொண்டு செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார்கள். அவர்கள் எந்த அளவுக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருந்தார்கள் என்றால் அன்னாரைப் பற்றி ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது.

அதாவது அன்னார் அமரும் போது கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுமதி பெற்ற பிறகே அமர்வார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 301,302 – அன்ஸா (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & ஷா முஅன்னுத்தீன் அஹ்மது நத்வி அவர்களால் எழுதப்பட்ட சீரத்துஸ் சஹாபா என்ற நூல் தொகுதி 2 பாகம் 2 பக்கம் 587 கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபாக தொகுதி 1 பக்கம் 283 – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அபூ கப்ஷா சுலைம் என்ற ஒரு நபித்தோழர் இருந்தார்கள். அபூ கப்ஷா அன்னாரது சுட்டுப் பெயராகும். அன்னாரது மரணமும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்தது. சிலர் அன்னாரது பெயரை சலமா என்று குறிப்பிடுகின்றனர். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட பாரசீக அடிமையாவார்கள். அன்னார் பத்ர் யுத்தத்திலும் கலந்து கொண்ட சஹாபி ஆவார்கள். அவ்ஸ் என்ற இடத்தில் அன்னார் பிறந்தார்கள். அன்னாரது நாடு மற்றும் குடும்பம் தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் இருக்கின்றன.

சிலர் பாரசீகத்தை சார்ந்தவர் என்றும், சிலர் தோஸி என்றும், சிலர் மக்காவைச் சார்ந்தவர் என்றும் குறிப்பிடுகின்றனர். அன்னார் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் இஸ்லாத்தை தழுவினார்கள். ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதி கிடைத்தவுடன் மதீனா சென்று விட்டார்கள். மேலும் பத்ர் போர் மற்றும் ஏனைய அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபாக தொகுதி 7 பக்கம் 284, அபூ கப்ஷா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & ஷா முஅன்னுத்தீன் அஹ்மது நத்வி அவர்களால் எழுதப்பட்ட சீரத்துஸ் சஹாபா என்ற நூல் தொகுதி 2 பாகம் 2 பக்கம் 579 கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ கப்ஷா அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த போது ஹஸ்ரத் குல்ஸூம் பின் அல்ஹதம் அவர்களது வீட்டில் தங்கினார்கள். சஅது பின் கைஸமா அவர்களது வீட்டில் தங்கியதாக இன்னொரு அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக நியமிக்கப்படுவதற்கு முந்தைய நாள் அன்னாரது மரணம் நிகழ்ந்தது. இது ஹிஜ்ரி 13 வது ஆண்டின் ஜமாஅதிவுஸ் ஸானி 22 ஆம் தேதி நடைபெற்ற விஷயமாகும்.

(அத்திப்காத்தில் குப்ரா தொகுதி 3 பக்கம் 36 அபூ கப்ஷா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மர்ஸித் பின் அபீ மர்ஸித் ஒரு சஹாபி ஆவார்கள். அன்னாரது மரணம் ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டில் சஃபர் மாதத்தில் ரஜீஃ என்ற இடத்தில் நிகழ்ந்தது. அன்னார் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபி ஆவார்கள். மேலும் ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் அவர்களின் உதவியாளர் ஆவார்கள். அன்னார் தனது தந்தையுடன் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள்.

அன்னார் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் இஸ்லாத்தை தழுவினார்கள். மேலும் பத்ர் போர் நடைபெறுவதற்கு முன்பாகவே ஹிஜ்ரத் செய்து மதீனா சென்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாமத் அவர்களுடன் அன்னாருக்கு சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள். பத்ர் போரின் நாளில் அன்னார் குதிரையில் வந்து கலந்து கொண்டார்கள். அந்த குதிரையின் பெயர் சபல் ஆகும்.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் மர்ஸத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் ரஜீஃ என்ற இடத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு படையின் தலைவராக விளங்கினார்கள். இந்த சம்பவம் ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டின் சஃபர் மாதத்தில் நடைபெற்றது. இந்த படையின் தலைவராக ஹஸ்ரத் ஆஸிம் பின் சாபித் அவர்கள் விளங்கியதாக சிலர் எண்ணுகின்றார்கள்.

(அத்திப்காத்தில் குப்ரா தொகுதி 3 பக்கம் 35 அபூ முர்ஸத் (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 133 முர்ஸத் பின் அபீ முர்ஸத் (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அவர்களது ஷஹாதத் தொடர்பான சம்பவம் இவ்வாறு வருகின்றது. அதாவது பனூ அஸல் மற்றும் காராவைச் சார்ந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாக வெளிப்படுத்திக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மார்க்க போதனைகளை பெற்றுக் கொள்வதற்காக சில ஆசிரியர்களை

அனுப்பும்படி விண்ணப்பித்தார்கள். (இது தொடர்பாக அறிவிப்புகளில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றது) எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மார்ஸத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு ஜமாஅத்தை அனுப்பினார்கள். இந்த மக்கள் ரஜீஃ என்ற இடத்தை அடைந்தவுடன் பனூ ஹுஸேல் உருவிய வாள்களை எடுத்துக் கொண்டு அங்கு வந்தார்.

மேலும், எங்களது நோக்கம் உங்களை கொலை செய்வதல்ல. மாறாக, உங்களுக்கு பகரமாக மக்காவாசிகளிடமிருந்து செல்வத்தை பெற விரும்புகின்றோம். நாங்கள் உங்களது உயிருக்கு உத்தரவாதம் அளிக்கின்றோம் என்று கூறினர். அதற்கு ஹஸ்ரத் மார்ஸத் (ரலி), ஹஸ்ரத் காலித் (ரலி) மற்றும் ஆஸிம் (ரலி) ஆகியோர், எங்களுக்கு உங்களது உத்திரவாத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று கூறினார்கள். இவ்வாறு சண்டையிட்டவாறு இந்த மூவரும் உயிரை தியாகம் செய்தார்கள்.

(ஷா முஅன்னுத்தீன் அஹ்மது நத்வி அவர்களால் எழுதப்பட்ட சீரத்துஸ் சஹாபா என்ற நூல் தொகுதி 2 பாகம் 2 பக்கம் 555 கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இன்னொரு சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அபூ மார்ஸத் பின் ஆஸ் பின் அல் ஹுஸைன் கனவி ஆகும். அவர்களது மரணம் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அபூ ஹஸன் என்பது அன்னாரது சுட்டுப் பெயராகும் என்று சிலர் கூறுகின்றனர். அன்னார் சிரியாவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

அன்னார் இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களிலேயே இஸ்லாத்தை தழுவினார்கள். மேலும் ஹிஜ்ரத்திற்கான அனுமதி கிடைத்த பிறகு மதீனா வந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கும் ஹஸ்ரத் இபாதா பின் சாமத் அவர்களுக்கும் இடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள்.

(ஷா முஅன்னுத்தீன் அஹ்மது நத்வி அவர்களால் எழுதப்பட்ட சீரத்துஸ் சஹாபா என்ற நூல் தொகுதி 2 பாகம் 2 பக்கம் 581 கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபாக தொகுதி 7 பக்கம் 305 அபூ முர்ஸத் அல்கனவி (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ மார்ஸத் (ரலி) அவர்களும் அவர்களது மகனான மார்ஸத் அவர்களும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த போது ஹஸ்ரத் குர்ஸூம் பின் அல்ஹதம் என்பவரது வீட்டில் தங்கினார்கள். இவ்விருவரும் ஹஸ்ரத் சஅது பின் கைஸமா அவர்களிடத்தில் தங்கினார்கள் என்று சிலர் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் அபூ மார்ஸத் பெருமானார் (ஸல்) அவர்களுடன் அனைத்து போர்களிலும் கலந்து கொண்டுள்ளார்கள்.

(அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 34,35 அபூ முர்ஸத் (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ மார்ஸத் அவர்களுக்கு வரலாற்றில் இந்த அந்தஸ்து இருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஅ என்பவர் மக்கா வெற்றிக்கு முன்பு தமது மனைவி மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மக்கத்து வாசிகளுக்கு இரசியமாக ஒரு கடிதத்தின் மூலமாக தகவல் கொடுக்க விரும்பினார். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இது பற்றி தெரிய வந்தது. அல்லாஹ் அன்னாருக்கு தெரிவித்தான்.

எனவே கடிதத்தை எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்த அந்த பெண்ணிடம் மூன்று நபர்களை அன்னார் அனுப்பினார்கள். அவர்கள் அந்த கடிதத்தை பெற்றுக் கொண்டார்கள். அந்த மூவரில் ஒருவர் ஹஸ்ரத் அபூ மார்ஸத் அவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் அலி அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னையும், ஹஸ்ரத் அபூ மார்ஸது கனவி மற்றும் சுபைர் அவர்களையும் அனுப்பினார்கள். மேலும் நாங்கள் குதிரையில் வேகமாக பயணம் செய்தோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். ரவ்ஸயே ஹாஹ் என்ற இடத்தில் இணை வைப்பவர்களைச் சேர்ந்த ஒரு பெண்மணி இருப்பார். அவளிடம் ஹாதிப் பின் அபீ பல்தாஹ் இணை வைப்பவர்களுக்கு எழுதிய ஒரு கடிதம் இருக்கும். இந்த அறிவிப்பு புஹாரியில் இருக்கின்றது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 3983)

அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து ஒரு ஹதீஸை அறிவிக்கின்றார்கள். முஸ்லிம் மற்றும் பக்வியில் அவர்களது ஹதீஸ் இருக்கின்றது. கூறுகின்றார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன். கபரின் மீது அமராதீர்கள். மேலும் அதனை நோக்கியவாறு தொழாதீர்கள் என்று கூறினார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபாக தொகுதி 7 பக்கம் 305 அபூ முர்ஸித் அல்கனவி (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 12 வது ஆண்டில் தமது 66 வது வயதில் அன்னாரது மரணம் நிகழ்ந்தது.

(ஷா முஅன்னுத்தீன் அஹ்மது நத்வி அவர்களால் எழுதப்பட்ட சீரத்துஸ் சஹாபா என்ற நூல் தொகுதி 2 பாகம் 2 பக்கம் 5811 கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சலைத் பின் கைஸ் பின் அம்ர் ஒரு சஹாபி ஆவார்கள். அவர்களது மரணம் ஹிஜ்ரத்தின் 14 வது ஆண்டில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் சலைத் பின் கைஸ் பின் அம்ர் பின் உபைத் பின் மாலிக் என்பது இவர்களது முழுப் பெயராகும். ஹஸ்ரத் சலேத் பின் கைஸ் மற்றும் ஹஸ்ரத் அபூ சல்மா ஆகிய இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு பனூ அவ்தி குடும்பத்தின் அதி பின் நஜ்ஜாரின் சிலையை உடைத்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றார்கள். அன்னார் ஒட்டகத்தில் அமர்ந்திருந்தவாறு மதீனா நகருக்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒவ்வொரு கோத்திரத்தைச் சார்ந்தவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் தங்க வேண்டும் என்று விரும்பினர். அன்னாரின் ஒட்டகம் பனூ அதியின் வீட்டிற்கு அருகே சென்றது. இந்த மக்கள் நபி (ஸல்) அவர்களின் மாமா ஆவார்கள். ஏனென்றால் சல்மா பின்த் உமர் பின்த் அப்தில் முத்தலிப் அவர்களின் தாய் இதே கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

அப்போது சலேத் பின் கைஸ் அபூ சலேத் மற்றும் அசீரா பின் அபூ ஹவாரிஜா தடுக்க நினைத்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், எனது ஒட்டகத்தை விட்டு விடுங்கள். இப்போது இது இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். அதாவது எங்கு இறைவன் விரும்புகின்றானோ அங்கு இது தானே அமர்ந்து விடும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சலேத் அவர்கள் பத்ர், உஹது, அகழ் மற்றும் அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். ஜிஸ்ரானி உபைது போரில் ஹிஜ்ரி 14 வது ஆண்டில் அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஷஹீதானார்கள்.

(அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 388 சலேத் பின் கைஸ் (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 229 பாபு ஹிஜ்ரத்துர் ரஸூல் (ஸல்) – 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஜஸ்ஸிர் பின் ஸியாத் அவர்களது ஷஹாதத் உஹது போரில் நிகழ்ந்தது. முஜஸ்ஸிர் அன்னாரது சுட்டுப் பெயராகும். அதன் பொருள் தடித்த உடலை கொண்ட மனிதர் என்பதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஜஸ்ஸிர் மற்றும் ஆகில் பின் பகீர் ஆகிய இருவருக்குமிடையில் சகோரத்துவத்தை நிலைநாட்டினார்கள்.

இன்னோர் இடத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஜஸ்ஸிர் அவர்களுக்கும் ஹஸ்ரத் உக்காஷா பின் மிஹ்ஸன் அவர்களுக்குமிடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள் என்று வருகின்றது. ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்கள் பத்ர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபாக தொகுதி 5 பக்கம் 572,573 அல் முஜஸ்ஸிர் பின் ஸியாத் (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 417 அல் முஜஸ்ஸிர் பின் ஸியாத் (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அயூனில் அஸர் தொகுதி 1 பக்கம் 232,233 பைரூத்திலுள்ள தாருல் கலமில் அச்சிடப்பட்டது)

இப்னு இஸ்ஹாக் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபுல் பஹ்தரி அவர்களை கொலை செய்ய தடை விதித்திருந்தார்கள். ஏனென்றால், மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துன்பங்கள் கொடுப்பத்திலிருந்து அவர் மக்களை தடுத்து வந்தார். அதற்குப் பகரமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவரை கொலை செய்யக் கூடாது என்று கூறினார்கள். தாமும் அன்னாருக்கு எந்தவொரு துன்பமும் கொடுத்ததில்லை.

குறைஷிகள் பனூ ஹாஷிம் மற்றும் பனூ மத்தலிபின் உடன்படிக்கைக்கு எதிராக நின்றனர். அவ்வாறு உடன்படிக்கைக்கு எதிராக நின்றவர்களில் அவரும் ஒருவராவார். ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்கள் அபுல் பஹ்தரியை கண்டார்கள். அவரிடம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உம்மை கொலை செய்ய எங்களை தடுத்துள்ளார்கள் என்று கூறினார்கள். அபூ பக்தரீ மக்காவிலிருந்து அவருடன் வந்த ஒருவரும் இருந்தார். அவருடைய பெயர் ஜுனாதா பின் முலைஹா ஆகும். அவர் பனூ லேஸை சார்ந்தவராவார்.

அபூ பக்தரீ பெயர் ஆஸ் ஆகும். அவர் கூறினார். என்னுடன் வந்திருப்பவரைப் பற்றி என்ன கட்டளை இடப்பட்டுள்ளது? என்று வினவினார். ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் உன்னுடன் வந்திருப்பவரை விட மாட்டோம். நபி (ஸல்) அவர்கள் உம்மைப் பற்றி மட்டுமே இவ்வாறு கட்டளை பிறப்பித்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

அதற்கு அவர், நாங்கள் இருவரும் மரணித்தாலும் ஒன்றாகவே மரணிப்போம். மக்கத்து பெண்கள், நான் எனது வாழ்விற்காக என்னுடன் வந்திருப்பவரை விட்டு விட்டேன் என்று கூறி அலைவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது என்று கூறினார். பிறகு இருவரும் ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்களுடன் சண்டையிட ஆயத்தமாயினர். ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்கள் அவர்களை கொன்று விட்டார்கள்.

ஹஸ்ரத் முஜஸ்ஸிர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்று இவ்வாறு கூறினார்கள். அதாவது எவன் உங்களை உண்மையுடன் அனுப்பினானோ அந்த இருப்பின் மீது ஆணையாக! நான் அவரிடம் மிகவும் பணிவுடன், அவன் கைதாகி விடட்டும். அவனை உங்களிடம் கொண்டு செல்வேன் என்று கூறினேன். ஆனால் அவன் நான் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் அவன் என்னுடன் சண்டையிட்டான். நான் அவனை கொன்று விட்டேன் என்று கூறினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 59,60 அல் முஜஸ்ஸிர் பின் ஸியாத் (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அயூனில் அஸர் தொகுதி 1 பக்கம் 301 பாபு கஸ்வா பதர், 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கலமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்களின் சந்ததிகள் மதீனாவிலும், பக்தாதிலும் இருந்தார்கள். அபீ வாயிஸா அவர்கள் அறிவிக்கின்றார்கள். உஹது போரில் ஷஹீதான மூன்று மனிதர்கள் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் முஜஸ்ஸிர் பின் ஸியாத், நுஃமான் பின் மாலிக் மற்றும் அப்தா பின் ஹஸ்ஹாஸ் ஆவார்கள்.

(அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 417 அல் முஜஸ்ஸிர் பின் ஸியாத் (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. ஹஸ்ரத் அனீஸா பின்த் அதீ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது மகன் அப்துல்லாஹ் பத்ர் போரில் கலந்து கொண்டுள்ளான். உஹது போரில் ஷஹீதாகி விட்டான். நான் எனது மகனை எனது வீட்டின் அருகிலேயே நல்லடக்கம் செய்ய வேண்டும்.

இதன் மூலமாக அவனது நெருக்கம் எனக்கு இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் எனறு கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதற்கான அனுமதியை வழங்கினார்கள். மேலும், ஹஸ்ரத் அப்துல்லாஹ்வுடன் அவரது நண்பரான ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அவர்களையும் ஒரே கபரில் நல்லடக்கம் செய்ய வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இதன் விளைவாக இரு நண்பர்களது உடலையும் ஒரே கம்பளியில் போர்த்தியவாறு ஒட்டகத்தில் வைத்து மதீனாவிற்கு அனுப்பப்பட்டது. இவர்களில் அப்துல்லாஹ் தடித்த உடலை கொண்டிருந்தார். முஜஸ்ஸிர் அவரைக் காட்டிலும் சிறிதளவு மெலிந்தவராக இருந்தார்.

அறிவிப்பில் வருகின்றது. கூறுகின்றார்கள். ஒட்டகத்திலிருந்து இருவரும் சமமாக இறக்கப்பட்டார்கள். அதாவது அவர்களது எடை ஒன்று போல் இருந்தது. இறக்கக் கூடியவர்கள் இதைப் பார்த்து மிகவும் வியப்படைந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், இருவரது அமல்களும் அவர்களுக்கிடையில் சமமாக இருக்கின்றன என்று கூறினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 7 பக்கம் 31, அனீஸா பின் அதீ (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் பின் ஜமூஃ ஒரு சஹாபி ஆவார்கள். அவர்களது மரணம் ஹஸ்ரத் உமர் அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் குபாப் அவர்கள் பத்ர் போரிலும், உஹது, அகழ் மற்றும் அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு இருந்தார்கள். உஹது போரில் பெருமானார் (ஸல்) அவர்களோடு உறுதியான பாதத்துடன் நிலைத்தி நின்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 665, குபாப் பின் மன்ஸர் (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 428 குபாப் பின் மன்ஸர் (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இவர்களைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் எழுதியுள்ளார்கள். அதாவது எந்த இடத்தில் இஸ்லாமிய படை கூடாரத்தை அமைத்ததோ அது அதற்குரிய இடமாக இருக்கவில்லை. எனவே ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், இறைவனது அறிவிப்பிற்கிணங்க தாங்கள் இந்த இடத்தை தேர்ந்தெடுள்ளீர்களா? அல்லது வெறுமனே போர் தந்திரத்தின் அடிப்படையில் இதை மேற்கொண்டுள்ளீர்களா? என்று வினவினார்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், இது தொடர்பாக எந்தவொரு இறை அறிவிப்பும் கிடையாது. நீங்கள் ஏதாவது ஆலோசனை தர விரும்பினால் தாருங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள் கூறினார்கள். எனது எண்ணத்தின் அடிப்படையில் இந்த இடம் சிறந்த இடம் கிடையாது. நாம் முன்னேறிச் சென்றவாறு குறைஷிகளின் அருகேயுள்ள நீரூற்றை கைப்பற்ற வேண்டும். நான் அந்த நீரூற்றை அறிந்தவனாக இருக்கின்றேன். அதன் தண்ணீரும் நன்றாக இருக்கும். தண்ணீரும் அதிகமாக இருக்கும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அந்த ஆலோசனையை விரும்பினார்கள். அப்போது வரை குரைஷிகள் ஒரு மரத்தின் அடியில் தான் தமது கூடாரத்தை அமைத்திருந்தார்கள். மேலும் அந்த நீரூற்று காலியாகவே இருந்தது. முஸ்லிம்கள் முன்னேறிச் சென்று அந்த நீரூற்றை கைப்பற்றினார்கள். ஆனால் திருக்குர்ஆனிலும் இது தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் நீரோடையில் அதிக தண்ணீரும் இருக்கவில்லை. மேலும் முஸ்லிம்களுக்கு தண்ணீர் தட்டுப்பாட்டிற்கான உணர்வு இருந்து வந்தது.

மேலும் அந்த பள்ளத் தாக்கில் எந்த பக்கம் முஸ்லிம்கள் இருந்தனரோ அதுவும் சிறந்ததாக இருக்கவில்லை. ஏனென்றால் அந்த பக்கம் மணல் அதிகமாக இருந்தது. இதன் விளைவாக அவர்களது கால்களுக்கும் சரியான பிடி கிடைக்காமல் இருந்தது. பிறகு இறைவனது அருள் எவ்வாறு வெளிப்பட்டது என்றால் சிறிது மழையும் பெய்தது.

அதன் விளைவாக முஸ்லிம்களுக்கு குழியை தோண்டி தோண்டி தண்ணீரை ஒன்று சேர்ப்பதற்கான வாய்ப்பும் கிடைத்தது. மேலும் மணலும் அமுங்கி விட்டது. மேலும் கால்களும் மணலில் புதையவில்லை. மேலும் குறைஷிகள் இருந்த இடம் சகதியால் நிரம்பியது. மேலும் அவர்கள் தரப்பில் இருந்த தண்ணீரும் கூட அசுத்தமாகியது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 356,357)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கினார். மேலும், ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள் வழங்கிய ஆலோசனையே சரியானது என்று கூறினார். குபாபே! நீர் சிந்தித்து ஆலோசனை வழங்கினீர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பத்ர் போரில் ஹஸ்ரஜின் கொடி ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்களிடம் இருந்தது. ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள் பத்ர் போரில் கலந்து கொண்ட போது அன்னாரது வயது 33 ஆகும்.

(அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 10, கஸ்வா பதர், 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் மேலும் எழுதியுள்ளார்கள். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தமது உளவாளிகள் மூலமாக குறைஷிகளின் படை நெருங்கி வருவதற்கான செய்தி கிடைத்தது. அன்னார் குபாப் பின் மன்ஸர் என்ற தமது ஓர் சஹாபியை அனுப்பி எதிரிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களது வலிமையை தெரிந்து கொண்டு வரும்படி அனுப்பி வைத்தார்கள்.

மேலும் அன்னார் அவர்களிடம், எதிரிகளின் படை வலிமைமிக்கதாக இருந்தால், மேலும் முஸ்லிம்களுக்கு அது அச்சத்திற்குரிய சூழ்நிலையை உருவாக்கக்கூடியதாக இருந்தால் திரும்பி வந்து மஜ்லிஸில் மிகப் பெரிய எண்ணிக்கை இருக்கின்றது என்று இதைப் பற்றி எதுவும் கூறக்கூடாது. மாறாக தனிமையில் தகவல் தர வேண்டும். ஏனென்றால், முஸ்லிம்களிடம் இதனால் கோழைத்தனம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கூறி அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் குபாப் அவர்கள் இரசியமாக சென்றார்கள். மிகவும் விழிப்புடன் சிறிது நேரத்திலேயே திரும்பி வந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடன் அனைத்து நிலைமைகளையும் பற்றி எடுத்துக் கூறி விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 484)

யஹ்யா பின் ஸஅத் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கரீஜா மற்றும் நஸீர் தினத்தன்று மக்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் கூறினார்கள். நாம் முஹல்லாவில் நமது கூடாரத்தை அமைக்கலாம் என்பது எனது ஆலோசனையாகும் என்று கூறினார்.

அதாவது அவர்களுக்கு அருகில் சென்று அங்குள்ள விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாம். மேலும் மேற்பார்வையும் சரியாக செய்ய முடியும் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களது ஆலோசனையின்படி அமல் செய்தார்கள். அன்னாரது மரணம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்தது.

(அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 427,428 – குபாப் பின் மன்ஸர் (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்த போது முஸ்லிம்களிடம் ஏற்படிருந்த நிலைமையை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். அந்த சம்பவம் தொடர்பாக வருகின்றது.

ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் இறைவனை புகழ்ந்தார்கள். மேலும், பாருங்கள்! எவர் முஹம்மதை வணங்கிக் கொண்டிருந்தாரோ அவர் நிச்சமயாக முஹம்மது (ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள் என்பதை நன்றாக அறிந்து கொள்ளட்டும். மேலும் எவர் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருந்தாரோ அவர் அல்லாஹ் என்றென்றும் உயிருடன் இருப்பவன். ஒருபோதும் மரணிப்பவன் அல்ல என்பதை நினைவில் கொள்ளட்டும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ பக்ர் இந்த வசனத்தை ஓதினார்கள்.

إِنَّكَ مَيِّتٌ وَإِنَّهُم مَّيِّتُونَ அதாவது நீங்களும் மரணிக்கக் கூடியவர்களே. மேலும் அ வர்களும் மரணிக்கக் கூடியவர்களே என்ற வசனத்தை ஓதினார்கள்.

பிறகு அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள்.

وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُولٌ

قَدْ خَلَتْ مِن قَبْلِهِ الرُّسُلُ ۚ أَفَإِن مَّاتَ أَوْ قُتِلَ انقَلَبْتُمْ عَلَىٰ أَعْقَابِكُمْ ۚ وَمَن يَنقَلِبْ عَلَىٰ

عَقِبَيْهِ فَلَن يَضُرَّ اللَّهَ شَيْئًا ۗ وَسَيَجْزِي اللَّهُ الشَّاكِرِينَ

அதாவது முஹம்மது (ஸல்) ஒரு தூதரேயன்றி வேறில்லை. அன்னாருக்கு முன் வந்த அனைத்து தூதர்களும் மரணித்து விட்டார்கள். அன்னார் மரணித்தாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ நீங்கள் உங்கள் குதிகால்களில் விலகிச் சென்று விடுவீர்களா? எவர் அவ்வாறு தமது குதிகால்களில் திரும்பிச் சென்று விடுவாரோ ஒருபோதும் அல்லாஹ்விற்கு அவரால் நஷ்டத்தை இழைக்க முடியாது. மேலும் கூடிய விரைவில் அல்லாஹ் நன்றி செலுத்துபவர்களுக்கு அதற்குரிய கூலியை வழங்குவான். (3:145)

சுலைமான் அவர்கள் கூறுகின்றார்கள். இதைக் கேட்டு விட்டு மக்கள் எந்த அளவு அழுதார்கள் என்றால் அவர்களது குரல் ஓசைகள் அடைபட்டு விட்டது.

சுலைமான் அவர்கள் கூறுகின்றார்கள். அன்ஸார் பனூ சஆதா அவர்களின் வீட்டிலும், ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா

அவர்களிடத்திலும் ஒன்று கூடினார்கள். மேலும் ஓர் அமீர் எங்களிடமிருந்தும் ஓர் அமீர் உங்கள் தரப்பிலிருந்தும் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் பின் கத்தாப், ஹஸ்ரத் அபூ உபைதப்னில் ஜர்ராஹ் அவர்களிடத்தில் வந்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் பேச ஆரம்பித்த போது ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை அமைதியாக இருக்கும்படி கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எதை பேச விரும்பினேனோ அதற்கான காரணம், நான் எப்படிப்பட்ட சொற்பொழிவை ஆயத்தம் செய்து வைத்திருந்தேன் என்றால் அது எனக்கு பிடித்திருந்தது. மேலும் ஹஸ்ரத் அபூ பக்ர் அவர்களால் அவ்வாறு பேச இயலாது என்று நான் அஞ்சினேன். அதற்குப் பிறகு ஹஸ்ரத் அபூ பக்ர் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அவர்களது சொற்பொழிவானது அனைவரது சொற்பொழிவுகளை விடவும் சூழ்நிலைக்கு ஏற்ற சிறந்த சொற்பொழிவாக இருந்தது.

இதைப் பற்றி நான் இங்கு குறிப்பிடக் காரணம் ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்களைப் பற்றிய குறிப்பு இங்கு வருகின்றது. குபாப் பின் மன்ஸர் அவர்கள் இதைக் கேட்டு விட்டு, ஒருபோதும் அல்ல. அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒருபோதும் அல்ல. இறைவா! நாங்கள் அவ்வாறு ஒருபோதும் செய்ய மாட்டோம்.

ஓர் அமீர் எங்களிடமிருந்தும், ஓர் அமீர் உங்களிடமிருந்தும் அதாவது குரைஷிகளிடமிருந்து ஒருவரும், அன்ஸாரிடமிருந்து ஒருவரும் அமீராக இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் இல்லை; மாறாக, நாங்கள் தான் அமீர் ஆவோம். மேலும் நீங்கள் அமைச்சராவீர்கள் என்று கூறினார்கள். ஏனென்றால் இந்த குரைஷிகளை சார்ந்த மக்கள் இனத்தின் அடிப்படையில் மற்ற அனைத்து அரபிகளை விடவும் சிறந்தவர்கள் ஆவர். மேலும் அரபிகளில் பழமையானவர்களாக இருந்தாலும் இவர்களே மேலானவர்கள் என்று கூறியவாறு ஹஸ்ரத் உமர் அல்லது அபூ உபைதா அவர்களிடத்தில் பைஅத் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் உமர் அவர்கள், இல்லை; மாறாக, நாங்கள் உங்களிடம் பைஅத் செய்வோம். ஏனென்றால், நீங்கள் தான் எங்கள் தலைவர் ஆவீர்கள். மேலும் எங்களில் சிறந்தவர் ஆவீர்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக் எங்களை விடவும் மிகவும் அன்பிற்குரியவர்கள் என்று கூறியவாறு ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களின் கையைப் படித்தார்கள். மேலும் அவர்களிடம் பைஅத் செய்தார்கள். மேலும் மக்களும் அவர்களிடத்தில் பைஅத் செய்தார்கள். அந்த சமயத்தில் அனைவருமே பைஅத் செய்தனர்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்) – பாபு கவ்லுன் நபி (ஸல்)... ஹதீஸ் எண் 3668)

ஹஸ்ரத் குபாப் பின் மன்ஸர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். மேலும் இந்த இரண்டு விஷயங்களில் உங்களுக்கு எந்த விஷயம் மிகவும் பிடித்தமானது? என்று வினவினார்கள். அதாவது நீங்கள் உலகத்தில் உங்களது சஹாபாக்களுடன் இருக்க விரும்புகின்றீர்களா? அல்லது அவன் உங்களுக்கு வாக்களித்துள்ள அருட்கொடைகள் நிரம்பிய சுவர்க்கத்தில் நிலைத்திருக்கக்கூடிய அருட்கொடைகளுடன் நீங்கள் உங்களது இறைவனிடம் செல்ல விரும்புகின்றீர்களா? என்று வினவினார்.

மேலும் நீங்கள் எதை விரும்புகின்றீர்களோ மேலும் எதன் மூலம் உங்களது கண்கள் குளிர்ச்சியூட்டக் கூடியதாக இருக்குமோ அதையும் தருவதாக அவன் உங்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான் என்று கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், நீங்கள் என்ன ஆலோசனை வழங்குகின்றீர்கள்? என்று வினவினார்கள். அதற்கு சஹாபாக்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் எங்களோடு இருப்பதே எங்களுக்கு மிகவும் விருப்பமாகும். மேலும் நீங்கள் எங்களுக்கு எதிரிகளின் பலவீனத்தைப் பற்றி கூறுங்கள். மேலும் அல்லாஹ்விடம், அவர்களுக்கு எதிராக நமக்கு உதவி செய்வதற்கு துஆ செய்யுங்கள். மேலும் தாங்கள் மறைமுகமான செய்திகளால் எங்களை விழிப்படையச் செய்யுங்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், குபாப் பின் மன்ஸர் அவர்களை நோக்கி, நீங்கள் ஏன் எதுவுமே பேசாமல் இருக்கின்றீர்கள்? மிகவும் மவுனமாக இருக்கின்றீர்கள்? என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் அதற்கு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களது இறைவன் உங்களுக்காக எதை விரும்புகின்றானோ அதை நீங்கள் விரும்புங்கள் என்று கூறினேன். அன்னார் எனது கூற்றை விரும்பினார்கள்.

(அல் முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 483, கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபாக (ரலி) – ஸிக்ரு மனாகிபுல் குபாப் பின் முன்ஸிர் (ரலி) – ஹதீஸ் எண் 5803 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ரிஃபாஆ பின் ராஃபிஃ பின் மாலிக் பின் அஜ்லான் அவர்கள் ஒரு சஹாபி ஆவார்கள். இவர்களும் அன்ஸாரி ஆவார்கள். இவர்களது மரணம் ஹஸ்ரத் அமீர் முஆவிய்யா அவர்கள் அமீராக இருந்த துவக்க நாட்களில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ரிஃபாஆ பின் ராஃபிஃ பின் மாலிக் பின் அஜ்லான் என்பது அவர்களது முழுப் பெயராகும். அவரது பட்டப்பெயர் அபூ மஆஸ் ஆகும். அவர்களது தாயின் பெயர் உம்மே மாலிக் பின்த் அபீ பின் சுலூல் ஆகும். நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் அபீ பின் சுலூல் என்பவனின் சகோதரி ஆவார்கள்.

பைஅத்தே உக்பாவிலும் கலந்து கொண்டுள்ளார்கள். பத்ர், உஹது மற்றும் அகழ் போர் மற்றும் பைஅத் ரிழ்வான் மற்றும் அனைத்து போர்களிலும் நபி (ஸல்) அவர்களுடன் ஒன்றாக இருந்தார்கள். அன்னாருக்கு இரண்டு சகோதரர்கள் இருந்தனர். கலாத் பின் ராஃபிஃ மற்றும் மாலிக் பின் ராஃபிஃ. இவர்களும் பதர் போரில் கலந்து கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 279, ரஃபாஆ பின் ராஃபி (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்தில் குபுரா தொகுதி 3 பக்கம் 447 ரஃபாஆ பின் ராஃபி (ரலி) 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஆஸ் அவர்கள் தமது தந்தையான ஹஸ்ரத் ரஃபா பின் ராஃபிஃ அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அவர்களது தந்தை பத்ர் போரிலும் பங்கு பெற்றவர்கள் ஆவார்கள். அவர்கள் கூறினார்கள். ஜிப்ரீல் நபி (ஸல்) அவர்களிடத்தில், நீங்கள் முஸ்லிம்களில் பதர் போரில் கலந்து கொண்டவர்களுக்கு எந்த அந்தஸ்தை வழங்குகின்றீர்கள்? என்று வினவினார்.

அதற்கு அன்னார், சிறந்த முஸ்லிம் அல்லது அதைப் போன்றே வேறொரு சொற்களை கூறினார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினார்கள். அவ்வாறே பத்ர் போரில் கலந்து கொண்ட அந்த மலக்குமார்களும் சிறந்தவர்கள் ஆவார்கள். இந்த அறிவிப்பு புஹாரியில் இடம் பெற்றுள்ளது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி.. ஹதீஸ் எண் 3992)

போரில் மலக்குமார்கள் எவ்வாறு கலந்து கொண்டார்கள்? ஹஸ்ரத் செய்யது ஸைனுல் ஆபிதீன் ஷா அவர்கள் புகாரிக்கு ஒரு விளக்கவுரையை எழுதியுள்ளார்கள். அதில் இந்த வானவர்கள் கலந்து கொண்டது தொடர்பாக கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் இவ்வாறு வருகின்றது. அதாவது திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

اِذْ يُوْحِيْ رَبُّكَ اِلَى الْمَلٰٓئِكَةِ اَنِّيْ مَعَكُمْ فَثَبِّتُوا الَّذِيْنَ اٰمَنُوْا سَاُلْقِيْ فِيْ قُلُوْبِ الَّذِيْنَ كَفَرُوا الرُّعْبَ فَاضْرِبُوْا فَوْقَ الْاَعْنَاقِ وَاضْرِبُوْا مِنْهُمْ كُلَّ بَنَانٍ۔

இரண்டு மூன்று ரீதியில் அறிவிப்புகளாக உள்ளது. ஒன்று மற்றொன்றோடு ஒன்றுபட்டு இருக்கின்றது. இது தொடர்பாக ஷா சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்.

அறிவிப்புகளில் வானவர்கள் போரில் கலந்து கொள்வது, பார்ப்பது தொடர்பான பாடத்திட்டத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதாவது இது கஷ்ஃப்பின் தோற்றமாகும். அவர்களின் போரும் கூட இடத்திற்கு தகுந்தவாறு நடைபெறுகின்றது. வாளினாலோ அம்புகளினாலோ நடப்பதல்ல. வானவர்கள் வாளையும், அம்பையும் தூக்கிக் கொண்டு போர் செய்யவில்லை.

மாறாக, அவர்களது பார்வை ஆன்மீக கண்களைக் கொண்டதாக இருந்ததேயொழிய பௌதீகமான கண்களைக் கொண்டு அல்ல. நபி (ஸல்) அவர்களும் பார்த்தார்கள். மேலும் சஹாபாக்களும் அவ்வாறே காட்சியை பார்த்தார்கள். வலிமார்களுக்கும் அவ்வாறான காட்சி காட்டப்படுகின்றது.

வானவர்கள் எவ்வாறு போரிடுகின்றனர்? என்பது தொடர்பாக ஷா சாஹிப் இந்த விளக்கத்தை அளிக்கின்றார்கள். அதாவது குரைஷிகளின் தலைவர்கள் நஹ்லா சம்பவத்தின் மூலமாக பிரிந்து சென்றதனால் கடுங் கோபத்தில் இருந்தனர்.

இந்த சம்பவம் பின் நாட்களில் ஏற்பட்ட போருக்கு முக்கிய காரணியாக அமைந்தது. அதன் விளைவாக நிராகரிப்பவர்களான குரைஷிகள் தொடர்பாக அவர்கள் அழிக்கப்படுவார்கள் என்ற இறைவனது விதியும் முழுமையானது. வானவர்களின் வழிமுறை நமது வழிமுறைகளை விடவும் மாறுபட்டதும், அவர்கள் போரில் பயன்படுத்துகின்ற ஆயுதமானது நமது ஆயுதங்களை விட மாறுபட்டதுமாகும்.

பத்ர் போரில் எதிரிகள் கூடாரத்தை அமைத்த இடமானது உயரமாக இருந்தது. அவ்வாறிருக்க நபி (ஸல்) அவர்கள் அந்த பள்ளத்தாக்கில் இறங்குவதும், சஹாபாக்களின் குறைவான எண்ணிக்கை எதிரிகளின் கண்களில் இருந்தும் தப்பி விடுவதும், சஹாபாக்கள் எய்திய ஒவ்வோர் அம்பும் குறி தவறாமல் சென்றதும், மேலும் எதிரிகளோடு நிலைத்திருந்தவாறு சண்டையிட்டுக் கொண்டிருந்ததும் இவை அனைத்தும் வானவர்கள் செய்த அற்புதங்களின் ஒரு பகுதியே ஆகும்.

இதைப் பற்றிய செய்தி அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இந்த சொற்களில் கூறினான். அதாவது நீங்கள் தமது ரப்பிடம் மன்றாடிக் கொண்டிருந்த நேரத்தை நினைத்துப் பாருங்கள். அதன் விளைவாக உமது இறைவன் உமது துஆவை செவியுற்றான். மேலும், உமக்கு ஆயிரக்கணக்கான வானவர்கள் மூலமாக உதவி செய்வேன் என்று கூறினான்.

அவர்கள் எழுதுகின்றார்கள். நபி (ஸல்) அவர்கள் செய்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதில் வெளிப்படையான காரணிகள் தென்பட்டாலும் அது தன்னகத்தே ஒரு வியக்கத்தக்க தொடராக நமக்கு தென்படுகின்றது. அந்த விஷயங்கள் மீது நாம் பார்வையை செலுத்தினால் அல்லாஹ்வின் மலக்குமார்களின் பணியே தென்படுகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அந்த இக்கட்டான சூழ்நிலையில் பாதுகாப்பாக மக்காவிலிருந்து வெளியேற்றியது யார்?

மேலும் மக்கத்து மக்களை கவனமற்றவர்களாக ஆக்கியது யார்? மேலும் ஹிரா குகை வரை குரைஷிகள் அன்னாரை பின் தொடர்ந்து வந்த பிறகும் அவர்களை நம்பிக்கை இழக்கச் செய்து திருப்பி அனுப்பியது யார்? மேலும் இஸ்லாத்தின் முன்னேற்றதிற்கான தலைமையகமாக அமைந்த மதீனா வரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பாதுகாப்புடன் கொண்டு சேர்த்து யார்?

மேலும் அவர்கள் எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களின் ஹிஜ்ரத்திற்குப் பிறகு மக்காவில் இணை வைக்கும் நிலைமைகள் இருப்பது, மேலும் பெருமானார் (ஸல்) அவர்களோடு உளப்பூர்வமான அன்பை வெளிப்படுத்துவது, மேலும் அன்னாரை மதீனாவில் மக்கத்து மக்களின் தீய எண்ணங்கள் மற்றும் திட்டங்களிலிருந்து விழிப்புடன் வைத்திருந்தது அதாவது ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களின் மூலமாகவும் அல்லாஹ்வின் வானவர்கள் செய்யும் பணியின் ஒரு பகுதியே ஆகும்.

ஆக இவ்வாறு தான் மலக்குமார்கள் பணி செய்கின்றனர். இந்த அனைத்து சம்பவங்களுக்கும் பின்னால் மலக்குமார்களின் திட்டமே செயல்படக் கூடியதாக இருக்கின்றது.

பிறகு ஷா சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள். நான் சஹீஹ் புகாரியின் ஒவ்வொரு பகுதியையும் முழுவதுமாக ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் படித்துள்ளேன். அவ்வாறே திருக்குர்ஆனின் தர்ஸையும் பல முறை கேட்டுள்ளேன். படித்துள்ளேன். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வானவர்கள் தொடர்பாக கூறி வந்தார்கள்.

அதாவது நூருத்தீனுக்கும் அல்லாஹ்வின் மலக்குமார்களோடு உரையாடும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த அமைப்பானது மிகவும் பரந்து விரிந்த அமைப்பாகும். மனிதனது ஆற்றல் மற்றும் மனிதன் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு ஆற்றல் மற்றும் செயல்களுக்கு மலக்குமார்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பார்ப்பதற்கான ஆற்றல், கேட்பதற்கான ஆற்றல், அறிவு, ஞானம், சிந்திப்பது ஆகிய இவை அனைத்திலும் அல்லாஹ்வின் மலக்குமார்களின் உதவி இல்லாமல் இருக்குமென்றால் இந்த அனைத்து ஆற்றல்களும் வீணானவையே ஆகும்.

மாறாக, அது இழப்பிற்குரியதாகும். மனிதனிடம் இருக்கின்ற அனைத்து ஆற்றல்களும் வானவர்களின் உதவியோடே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறினார்கள். அதாவது நமது ஒவ்வொரு சிந்தனையிலும் மற்றும் பௌதீக ஆற்றல்களுக்கும் வானவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களது தொடர்பானது ஒவ்வொரு மனிதனின் ஆற்றல்கள் மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப மாறுபடுகின்றது.

திருக்குர்ஆனில் இவர்களது எண்ணிக்கை பத்ர் போர் பற்றி கூறும் போது 3000 என்றும், உஹது போரில் 5000 என்றும் வந்துள்ளது. இந்த வித்தியாசம் சூழ்நிலைகளில் இருந்த மாறுபட்ட நிலைமைகளின் காரணமாகவே ஆகும். பத்ர் போரில் எதிரிகளின் எண்ணிக்கை குறைவாகவும், உஹது போரில் அதிகமாகவும் இருந்ததனால் அவ்வாறே அபாயகரமான பாதுகாப்பற்ற நிலை இருந்ததனால் வானவர்களும் சூழ்நிலைக்கேற்ப அதிக அளவில் கலந்து கொண்டனர்.

அல்லாஹ் கூறுகிறான். வாக்களிக்கப்பட்ட இறையுதவியானது இறைவனது பண்பான அஸீமிய்யத் (அனைத்தையும் மிகைத்து நிற்றல்) மற்றும் ஹகீமிய்யத் என்ற பண்பின் மூலமாக வெளிப்பட்டது. இந்த இரண்டு பண்புகளும் சிறந்த திட்டங்கள் வகுப்பது மற்றும் முழுமையான வெற்றி ஆகியவற்றை எதிர்பார்க்கின்றது.

ஆக வானவர்கள் சிலரை கொன்றதும், சிலருக்கு காயங்களை ஏற்படுத்தியதும் அவர்களது அடையாளம் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது என்றும், சஹாபாக்கள் மூலமாக யாருக்கு காயங்கள் ஏற்பட்டனவோ அவர்களது அடையாளம் வேறுவிதமாக இருந்தது என்று கூறுகின்றனர்.

(ஃபதஹுல் பாரி, ஷரஹ் சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி.. தொகுதி 7 பக்கம் 312 ஹதீஸ் எண் 3992 கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஆனால் இது தவறாகும். உண்மை என்னவென்றால், அவர்கள் மனித ஆற்றல்களுக்கு சரியான முறையில் வழிகாட்டுகின்றனர். மேலும் அதனை சரியாக பயன்படுத்துகின்றனர். ஆக இவை அனைத்தும் வானவர்கள் மூலமாக நடைபெறுவதனால் இதனை தான் வானவர்கள் போர் செய்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஹஸ்ரத் யஹ்யா பின் மஆத் பின் ரிஃபாஆ பின் ராஃபிஃ அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரிஃபா பத்ர் போரில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் ஆவார்கள். அவர்களது தந்தையான ஹஸ்ரத் ராஃபிஃ பைத்தே உக்பாவில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் ராஃபிஃ தனது மகனான ஹஸ்ரத் ரிஃபாஆவிடம், நான் பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டதை விட நான் பத்ர் போரில் கலந்து கொண்டது எனக்கு மிகவும் அதிகமாக கண்ணியமளிக்கக்கூடிய விஷயமாக இருக்கின்றது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 3993)

பத்ர் போரில் கலந்து கொண்டதன் எனக்கு மூலம் ஒரு மிகப்பெரிய கண்ணியம் கிடைத்துள்ளது. ஹஸ்ரத் ரஃபா பின் ராஃபி ஜமல் போரிலும், சஃபீன் போரிலும் ஹஸ்ரத் அலி அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

ஒரு அறிவிப்பிற்கிணங்க, ஹஸ்ரத் தல்ஹா அவர்களும் ஹஸ்ரத் சுபைர் அவர்களும் பஸ்ரா என்ற இடத்திற்கு படையுடன் வெளியேறிய போது ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் அவர்களின் மனைவியான உம்மே அல்ஃபஸ்ல் பின்த் ஹாரிஸ் ஹஸ்ரத் அலி அவர்களுக்கு இவர்கள் வெளியேறியது தொடர்பான தகவலை தெரிவித்தார்கள். அதற்கு ஹஸ்ரத் அலி அவர்கள், மக்கள் ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து அன்னாரை ஷஹீதாக்கி விட்டார்கள்.

மேலும் எவ்வித நிர்பந்தமுமின்றி என்னிடம் பைஅத் செய்தார்கள். நான் என்னிடம் பைஅத் செய்யுங்கள் என்று நிர்பந்திக்கவில்லை. மக்கள் என்னிடம் பைஅத் செய்தனர். ஹஸ்ரத் தல்ஹா மற்றும் சுபைர் அவர்களும் என்னிடம் பைஅத் செய்தனர். இப்போது அவர்கள் படையுடன் ஈராக்கை நோக்கி செல்கின்றார்கள் என்பது வியப்பாக இருக்கின்றது என்று அன்னார் கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் ரஃபா பின் ராஃபி அவர்கள், நபி (ஸல்) அவர்கள் மரணித்த போது நாங்கள் அதாவது அன்ஸார்களாகிய நாங்கள் தான் கிலாஃபத்திற்கு அதிக உரிமை படைத்தவர்கள் என்று எண்ணினோம். ஆனால் நாங்கள் நபி (ஸல்) அவர்களுக்கு உதவி புரிந்தோம். மேலும் எங்களது அந்தஸ்து மார்க்கத்தில் மிக உயர்வானதாகும். ஆனால் முஹாஜிர்களாகிய நாங்கள் தான் முதன்மையானவர்கள். மேலும் நபி (ஸல்) அவர்களுடைய நண்பர்கள் மற்றும் அன்னாருக்கு மிக நெருக்கமானவர்கள் என்று நீங்கள் கூறினீர்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள். நாங்கள் அல்லாஹ்வை நினைவுபடுத்தியவாறு உங்களிடம் கூறுகின்றோம். அதாவது நீங்கள் நபி (ஸல்) அவர்களது பிரதிநிதியாக ஆவதிலிருந்து எங்களை தடுக்காதீர்கள். நாங்கள் அந்த நேரத்தில் உங்களுக்காக கிலாஃபத்தை விட்டு கொடுத்தோம் என்பது உங்களுக்கு நன்றாக தெரியும். அப்போது நாங்கள் எவ்வித வாக்குவாதமும் செய்யவில்லை. மேலும் நாங்கள் கிலாஃபத்திற்கு முழுமையாக கட்டுப்பட்டு நடந்தவாறு பைஅத் செய்தோம்.

அதன் காரணம் என்னவென்றால், உரிமை கொடுக்கப்படுவதையும், அல்லாஹ்வின் வேதத்தின்படி அமல் செய்யப்படுவதையும், நபி (ஸல்) அவர்கள் சுன்னத் நிலை பெற்றிருப்பதையும் நாங்கள் அப்போது பார்த்தோம். எனவே எங்களுக்கு அதை ஏற்றுக் கொள்வதை தவிர வேறு வழியில்லை. மேலும் அதுவன்றி வேறு என்ன எங்களுக்கு தேவையும் இருந்தது? மேலும் நாங்கள் உங்களிடம் பைஅத் செய்தோம். பிறகு அதிலிருந்து திரும்பி சென்று விடவில்லை. பின்னாலும் சென்று விடவில்லை. எவர்களை விட சிறந்தவர்களாகவும், அதிகமான விருப்பத்திற்குரியவர்களாகவும் யார் இருந்தார்களோ அந்த மக்கள் இப்போது உங்களை எதிர்க்கின்றார்கள். எனவே நீங்கள் எங்களுக்கு கட்டளை இடுங்கள்.

அப்போது ஹிஜாஜ் என்ற ஓர் அன்ஸாரி வந்தார். அவர், அமீருல் முஃமினீன் அவர்களே! இந்த நேரம் கையை விட்டு செல்வதற்கு முன்னாலே இந்த விவகாரத்திற்கான தண்டனையை வழங்கி விட வேண்டும் என்று கூறினார்.

மேலும் அன்ஸார் கூட்டமே! எவ்வாறு நீங்கள் முன்பு நபி (ஸல்) அவர்களுக்கு உதவி செய்தீர்களோ அவ்வாறே இப்போது இரண்டாவது முறையாக அமீருல் முஃமினீனிற்கு உதவி செய்யுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த இரண்டாவது உதவி முதலில் செய்த உதவிக்கு ஒத்ததாகவே இருக்கும். ஆயினும் இன்றைய நாட்களை விட ஆரம்ப நாட்களில் செய்த உதவி சிறந்தாகும்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 280,281 ரஃபா பின் ராஃபி (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது

எவ்வாறிருப்பினும் அன்னாரது மரணம் அமீர் முஆவிய்யா அமீராக நியமிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் நிகழ்ந்தது.

(அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 497, ரஃபா பின் ராஃபி (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது

ஆக இது தான் சஹாபாக்கள் பற்றிய சம்பவங்களாகும். கடந்த ஜுமுஆவில் நான் கூறிய சம்பவம் தொடர்பாகவும் எடுத்துக் கூற விரும்புகின்றேன். ஒரு சம்பவத்தைப் பற்றி மேலும் விரிவாக எடுத்துரைக்கின்றேன். அம்மார் பின் யாஸிர் அவர்களைப் பற்றி நான் கூறி இருந்தேன். அதாவது ஹஸ்ரத் அமர் பின் ஆஸ் அவர்கள் அவர்களது மரணத்தின் போது மிகுந்த வருத்தத்தை வெளிப்படுத்தினார்கள்.

மேலும் அம்மார் பின் யாஸிர் அவர்களை கிளர்ச்சியார்களின் கூட்டம் தான் கொலை செய்யும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் அமீர் முஆவிய்யாவின் தரப்பில் இருந்ததால் தான் அன்னாருக்கு இந்த கவலை இருந்தது. மேலும் ஹஸ்ரத் அம்மார் அவர்களை ஷஹீதாக்கியதும் ஹஸ்ரத் அமீர் முஆவிய்யாவின் படை வீரர்கள் தான்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 474 கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா, ஸிக்ர் மனாகிப் அம்மார் பின் யாஸிர் (ரலி) ஹதீஸ் எண் 5726)

எவ்வாறிருப்பினும் இந்த விஷயம் தொடர்பாக சில மக்கள், இவர்கள் கிளர்ச்சியார்கள் என்றால் இவர்களது பெயரை ஏன் கண்ணியத்துடன் கூற வேண்டும்? அது மட்டுமின்றி அமீர் முஆவிய்யாவைப் பற்றியும் ஜமாஅத்தின் பிரசுரங்களில் ஒரு குறிப்பான அந்தஸ்து இருக்கின்றது என்று கேள்வி கேட்கின்றனர்.

முதல் விஷயம் என்னவென்றால், சஹாபாக்கள் அந்தஸ்து தொடர்பாக அவர் மன்னிக்கப்படுவார். இவர் மன்னிக்கப்பட மாட்டார் என்று கூறுவது நமது பணியல்ல. எவரது தவறான எண்ணம் அல்லது எவரது தவறின் காரணமாக இந்த வருத்தத்திற்குரிய சம்பவம் நிகழ்ந்திருந்தாலும் அவருடைய விவகாரம் இறைவனோடு இருக்கின்றது. அதற்கான தண்டனையை முஸ்லிம்கள் பெற்றனர். இந்த கேள்வி அந்த காலத்தில் வாழ்ந்த மக்களது சிந்தனையில் உதித்தது. மேலும் அவர்கள் இந்த சிந்தனை நீங்குவதற்கு துஆவும் செய்து வந்திருப்பார்கள். அதாவது இது என்ன நிகழ்ந்து விட்டது? இவரும் சஹாபி ஆவார். அவரும் சஹாபி ஆவார். ஒருவர் மற்றவருக்கு எதிராக சண்டையிடுகின்றனர். எனவே அல்லாஹ்விடம் வழிகாட்டலும் வேண்டியிருப்பர். அல்லாஹ்வும் அவர்களுக்கு வழிகாட்டியிருப்பான்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. அபூ வுஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள். அம்ர் பின் ஷுர்ஹபீல் அபூ மைஸரா அவர்கள்

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் அவர்களது மாணவராக இருந்தார்கள். கனவில் பார்த்தார்கள். அதாவது ஒரு பசுமையான தோட்டம் இருக்கின்றது. அதில் சில கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்களும் இருந்தார்கள்.

மேலும் சில கூடாரங்கள் இருந்தன. அவற்றில் ஸுல் கலாஃ இருந்தார். அப்போது அபூ முயஸ்ஸர் அவர்கள், இவர்கள் ஒருவருக்கொருவர் போர் செய்து கொண்டிருந்தார்களோ? இது எவ்வாறு நிகழ்ந்தது என்று கேட்கின்றார். அப்போது அவருக்கு, இந்த மக்கள் மிகப்பெரிய கருணையாளனை பெற்றார்கள் அதாவது மன்னிக்கக் கூடியவனை அவர்கள் பெற்றார்கள். எனவே தற்போது ஒன்றாக ஆகிவிட்டார்கள் என்று பதில் கூறப்பட்டது.

(அஸ் சுனனுல் குப்ரா தொகுதி 8 பக்கம் 302... ஹதீஸ் எண் 16720 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஆக இந்த விவகாரங்கள் தற்போது அல்லாஹ்விடம் உள்ளது. இந்த விவகாரங்கயையும், கருத்து வேறுபாடுகளையும் நமது உள்ளத்தில் இடமளிப்பது நமது வேலையல்ல. இந்த விவகாரங்களை உள்ளத்தில் வைத்திருப்பதனால் மேலும் போரின் விளைவினால் முஸ்லிம்கள் உள்ளத்தால் விலகிச் சென்று கொண்டிருக்கின்றனர். அவர்களிடைய பிரிவினை ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அதன் விளைவுகளையும் நாம் இன்று பார்க்கின்றோம்.

இந்த விஷயங்கள் நமக்கும் பாடமாகும். இந்த விஷயங்களுக்கு உள்ளத்தில் இடமளிப்பதற்கு பகரமாக ஒற்றுமையில் நிலைத்திருங்கள். நான் ஒரு முறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களை சான்று காட்டி இவ்வாறு கூறியிருந்தேன். அமீர் முஆவிய்யா தொடர்பாக ஏதோவொரு சம்பவத்தை கூறியிருந்தேன். அரபு நாட்டைச் சார்ந்த ஒருவர் எனக்கு எழுதியிருந்தார். அதாவது அவர் கிளர்ச்சி செய்யக்கூடிய மற்றும் கொலைகார கூட்டத்தைச் சார்ந்தவர் ஆவார். மேலும் அவர்களது தலைவர் ஆவார். அவரது பெயரை நீங்கள் ஏன் இவ்வளவு கண்ணியத்துடன் எடுத்துக் கூறுகின்றீர்கள்? என்று கேட்டிருந்தார்.

அறிவிப்புகளில் வந்துள்ள இந்த கனவு இவர்களுக்கு போதுமான பதிலாக இருக்கின்றது. அல்லாஹ்வின் மக்ஃபிரத் மற்றும் கருணையானது பரந்து விரிந்து இருக்கின்றது. நாம் நமது விவகாரங்களை சரி செய்ய வேண்டும். இவர்களைப் பற்றி எதுவும் சிந்திக்கவோ அல்லது கூறுவதற்கோ பகரமாக நம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் சில இடங்களில் அமீர் முஆவிய்யா தொடர்பாக அவர்களை புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

(மலாயிகத்துல்லாஹ், அன்வாருல் உலூம் தொகுதி 5 பக்கம் 552)

எனவே நமக்கும் இந்த பெரியவர்களின் தவறுகளை எடுத்துக் கூறுவதற்கு பகரமாக அவர்களிடமிருந்து படிப்பினையை பெற வேண்டும். ஹஸ்ரத் அமீர் முஆவிய்யா அவர்கள் தொடர்பாக இவ்வாறு வருகின்றது. அதாவது ஒரிடத்தில் ஹஸ்ரத் அலி அவர்களுக்கும், இவர்களுக்கும் இடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கருத்து வேறுபாடுகள் மிகவும் அதிகமாக பரந்து விரிந்து கொண்டிருந்தன. அப்போது ஒரு கிறித்தவ அரசர் முஸ்லிம்களின் நிலைமையை பலவீனமாவதை கண்டு தாக்குதல் தொடுக்க விரும்பினார். அது பற்றி அமீர் முஆவிய்யாவிற்கு தெரிய வந்த போது அன்னார் கூறினார்கள்.

உமது எண்ணம் இவ்வாறு இருக்குமெனில் நினைவில் கொள். நிச்சயமாக நீங்கள் போர் தொடுத்தால் ஹஸ்ரத் அலி அவர்களது கொடியின் கீழ் அவர்களின் சார்பாக சண்டையிடுபவர்களில் நானே முதல் போராளியாக இருப்பேன். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 430)

எனவே சிந்தித்து செயல்படுங்கள். எவ்வாறிருப்பினும் இந்த தகுதியும் அவர்களுடையது தான். நாம் எப்போதும் ஒன்றுபட்டு இருக்கவும், ஒற்றுமையில் நிலைத்திருக்கவும், நன்மைகளில் முன்னேறிச் செல்வதற்கும் அல்லாஹ் நமக்கு வாய்ப்பு அளிப்பானாக. ஆமீன்.

## முப்பது தஜ்ஜால் வருவார்கள் என்பதற்கான பதில் முப்பது தஜ்ஜால்கள் வருவார்கள். ஆனால், நபி அல்லது முஜத்திது (சீர்திருத்தவாதி) ஒருவர் கூட வரமாட்டார் என்பது எவ்வளவு சிறந்த கொள்கையாக இருக்கின்றது

முஸ்லிம் ஆலிம்கள் ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை மிகவும் மோசமாக எதிர்த்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த ஒரு நபியும் இந்த அளவு எதிர்ப்பிற்கு ஆளானதற்கான உதாரணம் கிடைக்காது. அளவில்லாமல் ஏச்சுப் பேச்சுக்களுக்கு அவர்கள் ஆளானார்கள். தஜ்ஜால் என்று அழைக்கப்பட்டார்கள்.

தஜ்ஜால் என்று கூறப்பட்டதற்கு பதில் கூறியவாறு அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: உம்மத்தை முற்றிலுமாக அழித்து விடுவதற்காக இந்த உம்மத்தில் முப்பது பொய்யர்கள் வருவார்கள் என்று ஹதீஸ்களில் இருக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றனர். இது எவ்வளவு சிறந்த கொள்கையாக இருக்கின்றது.

அறிவற்றவர்களே! இந்த உம்மத்திற்குக் கிடைக்கின்ற துர்பாக்கியமாக அவர்களது பங்கில் முப்பது தஜ்ஜால்கள் வரலாம். ஆனால், சிலுவைக் கொள்கையின் புயலைத் தடுத்து நிறுத்துவதற்காக ஒரு முஜத்திது (சீர்திருத்தவாதி) கூட வர முடியவில்லை. இதுதான் அவர்களது பங்கில் உள்ள நற்பாக்கியமா? இறைவன் முன்னுள்ள சமுதாயங்களில் அடுத்தடுத்து நபியையும் தூதரையும் அனுப்பியுள்ளான்.

இந்த உம்மத்திற்கான முறை வந்த சமயத்தில் அவர்களிடம் முப்பது தஜ்ஜால்கள் வருவார்கள் என்ற நற்செய்தி கூறப்பட்டிருக்கின்றது. இறுதியில் இந்த உம்மத்தின் ஆலிம்கள் கூட யூதர்களாக ஆகி விடுவர் என்பது கூட நிரூபிக்கப்பட்ட முன்னறிவிப்பாக இருக்கின்றது. இதுவரை இலட்சக்கணக்கான நபர்கள் முர்தத் ஆகி விட்டனர் என்பதும் வெளிப்படையாகத் தெரிய வந்திருக்கின்றது. அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைக் கை விட்டு விட்டனர். இந்த அளவு வழிகேடு இருந்தும் கூட இறைவன் மகிழ்ச்சி அடையாமல் இருக்கின்றானா?

நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்த உம்மத்திலிருந்து சுயமாகவே அவனே ஒரு தஜ்ஜாலை அனுப்பாத வரை அவனுக்கு மன நிறைவு ஏற்படவில்லையா? கருணை காட்டப்பட வேண்டிய இந்த உம்மத்திற்குச் சாதகமாக இந்த அளவு அருள்கள் வழங்கப்பட்டிருப்பது எவ்வளவு சிறப்பிற்குரிய விஷயமாக இருக்கின்றது. பிறகு இந்த தஜ்ஜாலை கொல்வதற்காக ஸஜ்தாக்களில் நம்பிக்கை கொண்டவர்களின் மூக்குகள் தேய்ந்து போயின.

அந்த தஜ்ஜாலின் அழிவிற்காக இலட்சக்கணக்கான துஆக்கள் செய்யப்பட்டன. திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால் இறைவன் அவற்றை கேட்காமல் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

ஆனால் அதற்கு நேர் மாற்றமாக இந்த தஜ்ஜால் தொடர்ந்து முப்பது வருடங்களாக முன்னேறிக் கொண்டேயிருக்கின்றார். உலகில் வானத்தின் ஒளியைப் போன்று பரவிக் கொண்டே செல்கின்றார். இதிலிருந்து இந்த உம்மத் மிகவும் துர்பாக்கியமுள்ள ஓர் உம்மத்தாகும் என்பது நிரூபணமாகி இருக்கின்றது. மேலும் இதை அழித்து விட வேண்டும் என்பதே இறைவனின் உறுதியான எண்ணமாக இருப்பது தெரிய வருகின்றது.

இந்த உம்மத் எந்த அளவு இறைவனின் கோபத்திற்கு ஆளாகி இருக்கின்றது என்றால், ஒருபுறம் அது தஜ்ஜாலின் பிடியின் கீழ் வந்து விட்டது. மேலும் இதுவரை உண்மையான மஸீஹ் மற்றும் மஹ்தி விண்ணில் இருப்பதாகவும் தெரியவில்லை. பூமியில் ஆயிரம் முறை கதறினாலும் கூட தொலைந்து போன அந்த இருவரும் அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? அல்லது மரணித்து விட்டனரா? எங்கு இருக்கின்றார்? என்ற கேள்விக்கு பதில் கூட கூறுவதில்லை.

நபிமார்கள் நிர்ணயித்திருந்த காலமும் கூட கடந்து சென்று விட்டது. உம்மத்தை கிறித்தவ மதம் தின்று விட்டது. ஆனால், இறைவனுக்கும் கருணை வரவில்லை. அவ்வாறே மஹ்தி மற்றும் மஸீஹ் ஆகிய இருவரது உள்ளங்களும் மென்மையாக இருக்கவில்லை.

(நுஸூலுல் மஸீஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 413)

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 9 August 2018 Issue No. 32

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மனந்திருந்தாவிடில் நீங்கள் அவளை விவகாரத்து செய்து விடலாம். ஏனெனில் அவள் தனது செயல்களால் உங்களை விட்டும் பிரிந்து சென்று விட்டாள். இப்போது அவள் உமது உடம்பின் ஒரு பகுதியாக இல்லை. ஆகவே வெட்கம் கெட்ட நிலையில் இப்போது நீங்கள் அவளுடன் வாழ்க்கை நடத்துவது ஆகுமானதன்று. ஏனெனில் இப்போது அவள் உமது உடலின் பகுதியாக இல்லை. அவள் அசுத்தம் நிரம்பிய, அழுகிய நாற்றமெடுக்கும் ஓர் உறுப்பாக இருக்கிறாள். எனவே இவ்வுறுப்பானது துண்டித்து ஒதுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இல்லையெனில் இது மற்ற உறுப்புகளையும் அசுத்தமாக்கிவிடும். இதனால் நீங்கள் மரணித்து விடலாம்.

திருக்குர்ஆன் உங்களை புதிய ஏற்பாட்டைப் போல் ஒருபோதும் சத்தியம் செய்ய வேண்டாம் என்று கூறவில்லை. மாறாக, முட்டாள்தனமான சத்தியம் செய்வதிலிருந்து அது உங்களை தடை செய்கிறது. ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் சத்தியம் செய்வது நல்ல தீர்ப்பு உண்டாவதற்கான ஒரு வழியாக இருக்கின்றது. மேலும் இறைவன் உண்மை நிரூபணமாவதற்குரிய எந்த வழியையும் வீணாக்க விரும்புவதில்லை. இதனால் அவனுடைய குறிக்கோள் மறுக்கப்பட்டு விடுகிறது. சர்ச்சைக்குரிய விஷயத்தில் எந்த மனிதனும் சாட்சியளிக்காவிட்டால் அப்போது தீர்ப்புக்காக இறைவனது சாட்சியம் அவசியமாகத் தேவைப்படுவது இயற்கையான ஒன்றாகும். எனவே சத்தியம் செய்வது இறைவனை சாட்சியாளனாக ஆக்குவதற்காக ஆகும்.

மேலும் திருக்குர்ஆன் உங்களுக்கு பைபிளின் புதிய ஏற்பாட்டைப்போல் எந்த ஓரிடத்திலும் அக்கிரமக்காரர்களை எதிர்க்க வேண்டாம் என்று கூறவில்லை. மாறாக, جَزٰٓؤُا سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثْلُهَا ۚ فَمَنْ عَفَا وَاَصْلَحَ فَاَجْرُهٗ عَلَى اللّٰهِ என்று கூறுகிறது. **(42:41)**

அதாவது, தீங்கிற்குரிய கூலி அதே அளவிலான தீங்கேயாகும். ஆயினும் எவர் கண்டும் காணாதிருந்து பாவத்தை மன்னித்து விடுகிறாரோ, மேலும் அந்த மன்னிப்பால் எந்தவொரு தீமையும் ஏற்படாமல் ஏதாவதொரு சீர்திருத்தம் ஏற்படுமோ இறைவன் அவர் மீது மகிழ்ச்சி அடைவான். மேலும் அவருக்கு இதன் பிரதிபலனையும் அளிப்பான்.

ஆகவே, திருக்குர்ஆனின் அடிப்படையில் எல்லா இடங்களிலும் பழிக்குப் பழி வாங்குவது புகழத்தக்கதன்று. அல்லது எல்லா சந்தர்ப்பங்களிலும் மன்னிப்பு அளிப்பதும் போற்றத்தக்கதன்று. மாறாக, சூழ்நிலைக்கேற்ப செயல்பட வேண்டும். எனவே பழிவாங்குவதும் மன்னிப்பு அளிப்பதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறும் அதனால் விளையும் நன்மையைப் பொருத்தும் இருக்கவேண்டுமேயன்றி தனது போக்கில் கட்டுப்பாடின்றி செயல்படக்கூடாது என்பது திருக்குர்ஆனின் கருத்தாகும்.

திருக்குர்ஆன் புதிய ஏற்பாட்டைப் போல் உங்களது பகைவர்களை நேசியுங்கள் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, எவரும் உங்களுக்கு பகைவனாக தனிப்பட்ட நிலையில் இருக்கலாகாது. உங்கள் அனுபவம் ஒவ்வொருவர் மீதும் பொதுவானதாக இருக்க வேண்டும். ஆனால் எவர் உமது இறைவனுக்கும் திருத்தூதருக்கும், இறைவனது வேதத்திற்கும் பகைவராக காண்படுவாரோ அவரே உமக்கும் பகைவராக இருக்கிறார்.

ஆகவே நீங்கள் அப்படிப்பட்டவர்களுக்காக அறிவுரை செய்வதிலிருந்தும் துஆச் செய்வதிலிருந்தும் அவர்களை வெறுத்து ஒதுக்கி விட வேண்டாம். நீங்கள் அவர்களின் செயல்கள் மீதே பகைமை பாராட்ட வேண்டுமேயன்றி அவர்கள் மீது அல்ல. மேலும் அவர்கள் சீர்திருத்தம் அடைவதற்காக முயற்சி செய்ய வேண்டும். இதைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآئِ ذِي الْقُرْبٰى **(16:91)**

இறைவன் உங்களிடம் என்ன நாடுகிறான்? நீங்கள் எல்லா மனிதர்களுடனும் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். மேலும் இதை விட மேலாக, எவர்கள் உங்களுக்கு நன்மை செய்யவில்லையோ அவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்ய வேண்டும். எவ்வாறு தாய்மார்கள், தங்களின் குழந்தைகளுடன் நடந்து கொள்கிறார்களோ அவ்வாறு நீங்கள் இறைவனுடைய படைப்பினங்களோடு அவர்களின் உண்மையான உறவினர்களைப் போல் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

ஏனெனில், உதவி செய்வதில் தன்னை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்ற உணர்ச்சியும் அந்தரங்கமாக உள்ளது. மேலும் உதவி புரிபவர் தான் புரியும் உதவியைச் சில சமயம் வெளிப்படுத்தியும் விடுகிறார். ஆனால் எவர் தாயைப்போல் இயல்பான உணர்ச்சியுடன் நன்மை புரிவாரோ அவர் ஒருபோதும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள மாட்டார். ஆகவே தாயைப் போலுள்ள இயல்பான உணர்ச்சியே நன்மைகளின் மிகவும் மேலான நிலையாகும்.

இந்த வசனம் படைப்பினங்களுடன் மட்டும் சம்பந்தப்பட்டதன்று. மாறாக, இறைவனோடும் சம்பந்தப்பட்டதாகும். இறைவனுடன் நீதியுடன் நடந்து கொள்ளுதல் என்றால் அவனது நன்கொடைகளை நினைவு கூர்ந்து அவனுக்குக் கீழ்ப்படிதலாகும். இறைவனோடு இஹ்ஸான் (நன்மை) செய்தல் என்றால் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போல் அவனது இருப்பு மீது நிச்சய உறுதி கொள்ள வேண்டும் என்பதாகும். இறைவனோடு اِيْتَآءِ ذِي الْقُرْبٰى வின் சம்பந்தம் என்னவென்றால் அவனை வணங்குவது சுவர்க்கத்தின் மீதுள்ள ஆசையாலோ, நரகத்தின் மீதுள்ள அச்சத்தினாலோ இருக்கக்கூடாது. சுவர்க்கமும் நரகமும் இல்லை என வைத்துக் கொண்டாலும் அப்போதும் அவன் மீது கொண்டுள்ள நேச உணர்ச்சியிலும் அவனுக்குக் கீழ்ப்படிவதிலும் எவ்வித வேறுபாடும் காணப்படக் கூடாது என்பதாகும்.

மேலும் எவர்கள் உங்கள் மீது சாபமிடுவார்களோ அவர்களுக்காக அருளை நாடுங்கள் என்று புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் திருக்குர்ஆன் நீங்கள் சுயமாக எதையும் செய்யாதீர்கள். இறைவனுடைய தோற்றங்களுக்கெல்லாம் இருப்பிடமாகிய உங்களுடைய இருதயத்திடம் இத்தகைய மனிதனோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என தீர்ப்பு கேளுங்கள் என்று அது கூறுகிறது.

ஆகவே சாமிடுபவன் கருணை காட்டுவதற்கு தகுதியுள்ளவன் என்றும் வானத்தில் அவன் மீது எவ்வித சாபம் இல்லை என்றும் இறைவன் உங்கள் இதயத்தில் போட்டால் நீங்கள் இறைவனுக்கு எதிரானவர்களாய் ஆகாமலிருக்க அவன் மீது நீங்களும் சாபம் இடாதீர்கள். இதற்கு மாறாக உங்களது மனசாட்சியானது அவனை ஒரு நிரபராதியாக ஏற்றுக் கொள்ளாவிடிலோ மேலும் வானத்தில் அம்மனிதன் மீது சாபம் உண்டு என உங்கள் இருதயத்தில் போடப்பட்டாலோ நீங்கள் அம்மனிதனுக்காக அருளை நாடாதீர்கள்.

ஏனெனில் ஷெய்த்தானுக்காக எந்த நபியும் அருளை நாடவில்லை. மேலும் எந்த நபியும் சாபமிடுவதிலிருந்தும் ஷெய்த்தானை விட்டு வைக்கவில்லை. ஆயினும் எவர் மீதும் நீங்கள் சாபமிட அவசரப்படாதீர்கள். ஏனெனில், பெரும்பாலான சாபங்கள் தங்கள் மீதே விழுகின்றன. ஆகவே மிக கவனமாக செயல்படுங்கள். எவ்வேலையாயினும் நன்றாக ஆராய்ந்தபின் செய்யத் துணியுங்கள். அத்துடன் இறைவனது உதவியையும் தேடிக் கொண்டிருங்கள்.

ஏனென்றால் நீங்கள் குருடர்களாயிருப்பதால் நீதிமான்களை அநீதிக்காரர்களாகவும், உண்மையாளர்களை பொய்யர்களாகவும் எண்ணி விடலாகாது. இதனால் நீங்கள் உங்கள் இறைவனை வெறுப்படையச் செய்யாதீர்கள். மேலும் உங்களது நல்ல செயல்களும் வீணாகிப் போய் விடலாம்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 28–31)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad